2010 ஏப்ரல் 15]
44—

மாணவர் விடுதி

***97108—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நூலஅள்ளி உயர்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நூலஅள்ளி உயர்நிலைப் பள்ளியின் 4 கி.மீ. சுற்றளவில் ஏற்கெனவே இரு விடுதிகள் இயங்கி வருவதால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவதற்கான அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பத்திரிகையிலே அடிக்கடி பார்த்திருப்பீர்கள்; சிறிய வயதில் பெண்களுக்குத் திருமணம் செய்துகொடுப்பது, அதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தடுத்து நிறுத்தி பெற்றோர்களைக் கைது செய்வது என்ற நிகழ்ச்சி திருமணம் நடக்கின்ற மாதங்களிலே தொடர்ந்து ஒவ்வொரு முறையும் வரக்கூடிய செய்தி. அதற்குக் காரணம், அந்த மக்கள் இருக்கக்கூடிய பகுதியிலே போதுமான பள்ளிகள் இல்லாமைதான். அப்படியே பள்ளிகள் இருந்தாலும், அங்கு தங்கிப் படிப்பதற்கான வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே பெண்களின் கல்வியை ஒன்பதாவது அல்லது பத்தாவது வகுப்போடு நிறுத்திவிட்டு, உடனடியாக அவர்களைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு அந்த மாவட்டத்து மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

[2010 ஏப்ரல் 15

நான் குறிப்பிடுகின்ற நூலஅள்ளி உயர்நிலைப் பள்ளியிலே ஏறக்குறைய 450 மாணவர்கள் படிக்கிறார்கள். குறிப்பாக, வத்தல்மலையிலே இருந்து மலைவாழ் மக்கள் வந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பத்தாம் வகுப்பு முடித்தவுடன் மறுபடியும் வேறு பகுதிகளுக்குச் சென்று படிப்பதற்குண்டான சூழ்நிலையில், பள்ளிகள் நீண்ட தொலைவில் இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுகிறார்கள். அந்த மாணவர்கள் தொடர்ந்து படிப்பைத் தொடரவேண்டுமென்று சொன்னால் கட்டாயம் அங்கே விடுதிகளை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கு அருகிலேயுள்ள வெங்கடம்பட்டி, முக்கல்நாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே விடுதிகள் கிடையாது. ஆனால், அங்கிருந்து ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கக்கூடிய லலிதம் பகுதியிலேதான் விடுதி இருக்கிறது. ஏறக்குறைய சுற்றியிருக்கக்கூடிய இரண்டு மேல்நிலைப் பள்ளிகள், இரண்டு உயர்நிலைப் பள்ளிகளிலே விடுதிகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய நலன் கருதி, அந்த மாணவர்களுடைய கல்வி நலன் கருதி, அங்கே அந்த விடுதியை அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே, விடுதிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியானதாக இருந்தாலும்கூட, அரசு ஒவ்வொரு பகுதியிலும் மாணவர் விடுதி ஆரம்பிக்கின்ற நேரத்திலே, அதற்குத் தகுதி இருக்கின்றதா என்று பார்க்கும் நேரத்திலே—இங்கே கடந்த ஆண்டு நாம் இடம் ஒதுக்கிக் கொடுத்ததில்கூட ஏழு இடங்கள் காலியாக இருப்பதாக எனக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் சரிபார்த்துக்கொண்டு, தேவையென்று கருதுகிற நேரத்திலே, அரசு நிதிநிலைக்கேற்றாற்போல அந்தப் பகுதியிலே விடுதி ஆரம்பிக்கப்படும்.

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான இடம் இல்லாமல் மாணவர்கள் வந்து தங்கமுடியாத சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். கூடுதலான இடம் வேண்டுமென்றுதான் நாங்கள் தொடர்ந்து இங்கே கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றோம். இதுபோலவே என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய ஒத்தம்பட்டி, முழுக்க முழுக்க மலைகள் சூழ்ந்த பகுதி. அங்குள்ள மேல்நிலைப் பள்ளி மலைப் பகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்கள் வந்து படிக்கக்கூடிய பள்ளி. அந்தப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்கள்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட கல்வி அதிகாரி அவர்களைத் தொடர்புகொண்டு விசாரிக்கலாம்—பெரும்பாலும் 90 சதவிகிதம் மேல்படிப்புக்குச் செல்வதே கிடையாது. தங்களுடைய படிப்பை மேல்நிலைப் பள்ளியோடு நிறுத்திவிடுகிறார்கள். அதற்குக் காரணம் அங்கே தங்குவதற்குண்டான விடுதி வசதி கிடையாது. அங்கிருந்து மற்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் ஏறக்குறைய 30, 40 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். அந்தச் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அங்கே அந்த மேல்நிலைப் பள்ளிக்கு விடுதி ஒன்று கட்டாயம் அவர்கள் வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் என் தொகுதியில் இருக்கின்ற சோளக்கொட்டாய் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவிகள் விடுதி ஒன்று அறிவிக்கப்பட்டது. அந்த விடுதி தனியார் வீட்டிலே நடந்துவருவதால் அந்த விடுதியில் இருக்கக்கூடிய 50 பெண்களும் கழிப்பிட வசதி இல்லாமல், குளியலறை வசதியில்லாமல் கடுமையான, சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதியாண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விடுதிக்குக் கட்டடம் ஒன்றைக் கட்டித் தருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற அந்த விடுதிக்கு இடம் உடனடியாகக் கிடைக்கும் என்று சொன்னால், கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் நிதி ஆண்டில் எத்தனை மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளைப் புதிதாகத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது? அவ்வாறு தொடங்கவுள்ள நிலையில் மதுரை மாவட்டத்தில் கள்ளர் சீரமைப்புத் துறைமூலமாக பெருங்காமநல்லூர், தாடையம்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுடைய நன்மையைக் கருதி, மாணவர்கள் விடுதி அல்லது மாணவிகள் விடுதி புதிதாகத் தொடங்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் புதிதாக விடுதிகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. தொடங்காமல் இருக்கிற புதிய பகுதிகள் எங்கே இருக்கின்றனவோ, அங்கெல்லாம் புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்காக 25 இடங்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய பகுதிக்கு இதுபோன்று விடுதிகள் வேண்டுமென்று நிறைய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.